சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

வாரப்பாடசாலை

செயலட்டை - 08

பாடம்:-பொருளியல்

தரம் -12

2021. 06. 28 – 2021. 07. 02


Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa

**தேர்ச்சி 6.0 :- பேரினப் பொருளாதார சமநிலை தீர்மானிக்கப்படும் விதத்தை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 :- பேரினப் பொருளாதார சமநிலை மற்றும் சமநிலையின்மையை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2:- மொத்தச் செலவின்கூறுகளை விளக்குவார்.**

❖ **தேசிய வருமானச் சமநிலை** :- பேரினப் பொருளாதாரம் ஒன்றில் மொத்த நிரம்பலும் மொத்தக் கேள்வியும் ஒன்றுக்கொன்று சமனாக காணப்படுகின்ற நிலை தேசிய வருமான சமநிலை ஆகும்.

❖ **<u>பேரினப் பொருளாதார சமநிலையை முன்வைக்கக்கூடிய அணுகுமுறைகள்.</u>**

1. மொத்தக் கேள்வி (AD ) = மொத்த நிரம்பல் (AS)
2. மொத்த வருமானம் (Y) = மொத்தச் செலவு (E)
3. மொத்த உட்பாய்ச்சல் (J) = மொத்த வெளிப்பாய்ச்சல் (W)

❖ **மொத்தச் செலவு :-** குறித்த காலப்பகுதியில் பேரினப் பொருளாதாரம் ஒன்றிலுள்ள பல்வேறு துறையினரால் பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் செலவே மொத்தச் செலவாகும்.

**பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1. மொத்தச் செலவினுள் உள்ளடங்குகின்ற கூறுகள் யாவை?

2. "சுயாதீன நுகர்வு" என்பதனால் கருதப்படுவது யாது? அதனைத் தீர்மானிக்கின்ற காரணிகள் யாவை?

3. "அடிப்படைச் சேமிப்பு" என்பதனால் கருதப்படுவது யாது?

4. கீழ்வரும் அட்டவணையை கருத்திற்கொண்டு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

| வருமானம் (Y) | நுகர்வு (C) | சேமிப்பு (S) |
|---|---|---|
| 0 | 40 | -40 |
| 200 | 220 | - 20 |

அ) தன்னிச்சையான நுகர்வு யாது?
ஆ) தன்னிச்சையான சேமிப்பு யாது?
இ) எல்லை நுகர்வு நாட்டம் யாது?
ஈ) எல்லை சேமிப்பு நாட்டம் யாது?
உ) 300/= வருமானத்தில் மொத்த நுகர்வுச் செலவு யாது?
ஊ) நுகர்வுச் சமன்பாடு யாது?
எ) சேமிப்புச் சமன்பாடு யாது?

5. பொருளாதாரமொன்றில் நுகர்வுக்கும் சேமிப்புக்கும் இடையிலான தொடர்பை விளக்குக.

6. அரசின் மொத்தக் கொள்வனவுகள் என்பதனால் கருதப்படுவது யாது?